நோயாளி தகவல் கையேடு

# சோடியம் பைகார்பனேட்

(SODIUM BICARBONATE)

MINISTRY OF HEALTH
SINGAPORE

SINGHEALTH / PIL / T126R0

## உங்கள் மருந்து **பற்றிய** தகவல்

**சிறு அளவிலான சிறுநீர்க்குழாய் கிருமித்தொற்றுகளின்போது ஏற்படும் அசௌகரியத்தைப் போக்க சோடியம் பைகார்பனேட் பயன்படுத்தப்படுகிறது. இந்த மருந்து இரைப்பையில் அளவுக்கு அதிகமாகச் சுரக்கும் அமிலத்தை மட்டுப்படுத்தக் கூடியது என்பதால், செரிமானக் கோளாற்றினால் ஏற்படும் நெஞ்சு எரிச்சலுக்கும் அமில அஜீரண த்திற்கும் இது பயன்படுத்தப்படலாம். குறிப்பிட்ட சில மருத்துவப் பிரச்சினைகளில், இரத்தம் மற்றும் சிறுநீரின் காரத்தன்மையை அதிகரிப்பதற்கும் சோடியம் பைகார்பனேட் பயன்படுத்தப்படுகிறது.**

## இந்த மருந்தை நான் **எப்படி** பயன்படுத்த வேண்டும்?

பிரச்சினையின் கடுமைக்கேற்ப, நீங்கள் பயன்படுத்த வேண்டிய மருந்தின் அளவை மருத்துவர் தீர்மானிப்பார். இந்த மருந்தை மருத்துவர் கூறும் அளவில் பயன்படுத்துங்கள்.

## மருந்து உட்கொள்ள **மறந்துவிட்டால்** என்ன செய்வது?

ஒரு வேளைக்குரிய மருந்தை எடுக்கத் தவறிவிட்டால் அல்லது மறந்துவிட்டால், ஞாபகம் வந்த உடனேயே உட்கொள்ளுங்கள். எனினும், அப்போது அடுத்த வேளைக்கான நேரம் நெருங்கிவிட்டால், முதலில் எடுக்கத் தவறிய மருந்தை எடுக்காமல் விட்டுவிட்டு, அடுத்த வேளை வரை காத்திருங்கள். முதலில் எடுக்கத் தவறிவிட்டோமே என்று அடுத்த வேளையில் இரண்டு மடங்கு மருந்தோ அல்லது கூடுதல் மருந்தோ உட்கொள்ளாதீர்கள்.

## மருந்து ஏற்படுத்தக்கூடிய **பக்க-விளைவுகள்** யாவை ?

பின்வரும் பக்க-விளைவுகள் பாதித்தால், கூடிய விரைவில் மருத்துவரைப் பாருங்கள்:

- அடிக்கடி சிறுநீர் கழிக்கத் தோன்றுதல்
- தலைவலி (தொடர்ச்சியாக)
- பசியின்மை (தொடர்ச்சியாக)
- குமட்டல் அல்லது வாந்தி
- மிக மெதுவாகச் சுவாசித்தல்
- பாதம் மற்றும் கீழ்க் கால் வீங்குதல்
- வாயில் இனிமையற்ற சுவை
- வழக்கமில்லாத களைப்பு அல்லது பலவீனம்.

மருந்துகளை எப்போதும் பிள்ளைகளின் கைகளுக்கு எட்டாத இடத்தில் வைத்திருங்கள்
காலாவதியான அல்லது இனிமேல் தேவைப்படாத மருந்துகளை வீசிவிடுங்கள்

## நான் எடுக்க வேண்டிய **முன்னெச்சரிக்கைகள்** யாவை ?

சோடியம்-குறைந்த உணவுத் திட்டத்தில் நீங்கள் இருந்தால், அதை மருத்துவரிடம் தெரிவியுங்கள்.

இந்த மருந்து எடுக்கும்போது, பால் அல்லது பால் பொருட்களை மிக அதிகமாக உட்கொள்ளாதீர்கள். பக்க-விளைவுகள் ஏற்படும் அபாயம் அதிகரிக்கும்.

வேறு மருந்துகள், மூலிகைகள், ஊட்டச்சத்து உணவுகள் அல்லது வைட்டமின்களை நீங்கள் உட்கொண்டு வந்தால், அதை மருத்துவர் மற்றும் மருந்தாளரிடம் தெரிவியுங்கள்.

வேறு மருந்துகளுக்கு ஒவ்வாமை இருந்தால், அல்லது இந்த மருந்துக்கு ஒவ்வாமை ஏற்பட்டால், அதைக் கண்டிப்பாக மருத்துவரிடம் தெரிவிக்க வேண்டும். ஒவ்வாமையின்போது பின்வரும் அறிகுறிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டது பாதிக்கும்ஈ முகம்/கண்கள்/ உதடுகள் வீங்கும், மூச்சுவிட சிரமமாக இருக்கும், அல்லது உடல் முழுவதும் அரிப்புடன் கூடிய தோல் தடிப்புகள் தோன்றும்.

நீங்கள் தாய்ப்பால் கொடுத்து வந்தால், கர்ப்பமாக இருந்தால், அல்லது சிகிச்சைக் காலத்தில் கர்ப்பமடைவதற்கு வாய்ப்பு இருந்தால், அதை மருத்துவரிடம் தெரிவியுங்கள்.

## மருந்தை நான் எப்படிப் **பாதுகாக்க** வேண்டும் ?

மருந்தின்மீது வெப்பம் மற்றும் நேரடி வெளிச்சம் படாதவாறு, அறை வெப்பநிலையில் ஓர் உலர்ந்த இடத்தில் வைத்திருங்கள். உங்களிடம் கூறப்பட்டாலன்றி, மருந்துகளை குளிர்ப் பதனப் பெட்டியில் வைக்காதீர்கள்.